DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.323/2023**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | சிவசக்திவேல் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | துரைச்சாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 26.02.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஆறாவயல் காவல் நிலையத்தில் சிறப்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் திரு.பாண்டியன் அவர்களையும் அவருடைய கையொப்பத்தையும் நன்கு தெரியும். அதனால் கோப்புகளின் அடிப்படையில் சாட்சிம் அளிக்கிறேன். அ.சா.1 கொடுத்த புகார் மனுவை பெற்று முதல் தகவல் அறிக்கை கு.எண்.76/2023, இதச பிரிவுகள் 294(பி),323,506(1) கீழ் பதிவு செய்துள்ளார். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அதன்பின்னர் 02.09.2023 ம் தேதி 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**மேற்படி பார்வை மகஜர்**

**அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 9 சாட்சிகளை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் எதிரியை தேடி கடந்த 07.09.2023 ம் தேதி பகல் 12 மணிக்கு வெங்களூர்-புதுவயல் ரோட்டில் காரணம் கூறி கைது செய்து மாண்புமிகு உச்சநீதிமன்ற கட்டளைகளை நிறைவேற்றி சமூகம் நீதிமன்ற காவல் அடைப்புக்கு உட்படுத்தியுள்ளார். பின்னர் காயம் பட்ட சாட்சிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி.ஷர்மிளாவை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். **(அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன்பின்புறம் காயத்தின் தன்மை குறித்து கருத்துரை தர இயலாது என்று வழங்கிய சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன்-படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கையை சார்பு ஆய்வாளர் பதிவுசெய்துவிட்டார் என்றால் சரியல்ல. சம்பவ சாட்சிகளை சம்பவ இடத்தில் விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளார் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.